**சுருக்கம்**

சுற்றுலா – மாநில அரசு நிதி உதவித் திட்டம், 2010–2011 – திருநெல்வேலி மாவட்டம், குத்திரபாஞ்சான் அருவிப் பகுதியில் சுற்றுலா மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ள ரூ.111.25 இலட்சம் நிதி ஒப்பளித்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**சுற்றுலா மற்றும் பண்பாட்டு (சு3) த்துறை**

அரசாணை(நிலை) எண்.233, நாள்: 21–10–2010

திருவள்ளுவர் ஆண்டு–2041, ஐப்பசி–4.

**படிக்கவும்:**

1) திருநெல்வேலி மாவட்ட ஆட்சியரின் நேர்முகக் கடித எண்.81/சுற்றுலா/2010, நாள்: 11–09–2010.
2) சுற்றுலா இயக்குநரின் நேர்முகக் கடித எண்.5530 –C / தி.வ–2 / 2010, நாள்: 18–09–2010.

* * * * *

**ஆணை:**

2010–2011 ஆம் ஆண்டு துறை மானியக் கோரிக்கையின் போது, மாண்புமிகு சுற்றுலா–பதிவுத்துறை அமைச்சர் அவர்கள் பின்வரும் அறிவிப்பினை வெளியிட்டார்கள்:

> **“திருநெல்வேலி மாவட்டம் குத்தர பாஞ்சான் அருவிப் பகுதியின் கட்டமைப்பு வசதிகள் சுற்றுலாப் பயணிகளைப் பெருமளவு கவரும் பொருட்டு மேம்படுத்தப்படும்”**

2) இதனைத் தொடர்ந்து, திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் தாலுகா, பணகுடி பேரூராட்சிப் பகுதியிலுள்ள குத்திரபாஞ்சான் அருவிப் பகுதியில் பின்வரும் சுற்றுலா அடிப்படை வசதிகளை மேற்கொள்ள நிதி ஒதுக்கீடு மற்றும் அனுமதி பெற்றுத் தருமாறு மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் சுற்றுலா இயக்குநரைக் கோரியுள்ளார்:–

| வரிசை எண் | திட்டப் பணி விபரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் லட்சத்தில்) |
|---|---|---|
| 1 | குத்திரபாஞ்சான் அருவிக்கு செல்லும் பாதையில் 1.50 கி.மீ. வரை தார் சாலை | **25.00** |
| 2 | அருவிக்கு செல்லும் பாதையில் 1.50 கி.மீ.– 4.00 கி.மீ. வரை தார் சாலை | **40.00** |
| 3 | அருவியிலிருந்து கன்னிமாரான் அருவி வரை 0.கி.மீ.– 1.30 கி.மீ. வரை தார் சாலை | **20.00** |
| 4 | ஆலந்துறை ஒடை மற்றும் கன்னிமாரான் அருவி குறுக்கே சிறு பாலம் அமைத்தல் | **13.00** |
| 5 | குத்திரபாஞ்சான் மற்றும் கன்னிமாரான் அருவி அருகே மின்சார வசதி செய்தல் | **25.00** |
| 6 | குத்திரபாஞ்சான் மற்றும் கன்னிமாரான் அருவி அருகே உடை மாற்றும் அறை | **14.00** |
| 7 | குத்திரபாஞ்சான் அருவி அருகே ஆண்கள் மற்றும் பெண்களுக்கான கழிப்பிடம் | **13.00** |
| 8 | கன்னிமாரான் அருவி அருகே ஆண்கள் மற்றும் பெண்களுக்கான கழிப்பிடம் | **13.00** |
| 9 | கன்னிமாரான் அருவி அருகே படித்துறை அமைத்தல் | **06.25** |
| 10 | வனத்துறையிடமிருந்து வரவேண்டிய திட்ட மதிப்பீடு | **10.00** |
| | மொத்தம் | **179.25** |

3) திருநெல்வேலி மாவட்டம், மேற்கு தொடர்ச்சிமலை அடிவாரத்தில் அமைந்துள்ள **'ஏழைகளின் குற்றாலம்' என்று அழைக்கப்படும் குத்திரபாஞ்சான் அருவி'** உள்ளூர் மக்களையும், சுற்றுலாப் பயணிகளையும் அதிகம் ஈர்க்கிறது எனவும், நாங்குநேரி, கூந்தன்குளம் பறவைகள் சரணாலயம், திருக்குறுங்குடி போன்ற பிற சுற்றுலாத் தலங்களும் இம்மாவட்டத்தில் உள்ளன எனவும், இப்பகுதியில் சுற்றுலா அடிப்படை வசதிகள் மேற்கொள்ள திருநெல்வேலி மாவட்ட ஆட்சியரால் தெரிவிக்கப்பட்டுள்ள பணிகளை மேற்கொள்ள ரூ.179.25 இலட்சத்தினை அனுமதித்து நிதி ஒதுக்கீடு செய்யுமாறு மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் சுற்றுலா இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

4) திருநெல்வேலி மாவட்ட ஆட்சியரின் செயற்குறிப்பின்மீது பரிந்துரை செய்துள்ள சுற்றுலா இயக்குநரின் கருத்துருவை அரசு கவனத்துடன் பரிசீலனை செய்து, திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், பணகுடி பேரூராட்சிப் பகுதியில் அமைந்துள்ள **"குத்திரபாஞ்சான் அருவிப்"** பகுதியில், பின்வரும் சுற்றுலா மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ள ரூ.111.25 இலட்சம் (ரூபாய் ஒரு கோடியே பதினோரு இலட்சத்து இருபத்தைந்தாயிரம் மட்டும்) ஒப்பளிப்பு செய்து ஆணையிடுகிறது:

| வ. எண் | திட்டப் பணி விபரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் லட்சத்தில்) |
|---|---|---|
| 1 | குத்திரபாஞ்சான் அருவிக்கு செல்லும் பாதையில் 1.50 கி.மீ. வரை தார் சாலை | 25.00 |
| 2 | அருவிக்கு செல்லும் பாதையில் 1.50 கி.மீ.– 4.00 கி.மீ. வரை தார் சாலை | 40.00 |
| 3 | குத்திரபாஞ்சான் மற்றும் கன்னிமாரான் அருவி அருகே உடை மாற்றும் அறை | 14.00 |
| 4 | குத்திரபாஞ்சான் அருவி அருகே ஆண்கள் மற்றும் பெண்களுக்கான கழிப்பிடம் | 13.00 |
| 5 | கன்னிமாரான் அருவி அருகே ஆண்கள் மற்றும் பெண்களுக்கான கழிப்பிடம் | 13.00 |
| 6 | கன்னிமாரான் அருவி அருகே படித்துறை அமைத்தல் | 06.25 |
| | **மொத்தம்** | **111.25** |

5) மேலே ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள இச்செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும் :–

> "5452 – சுற்றுலா குறித்த மூலதனச் செலவு–01–சுற்றுலா அடிப்படை வசதிகள் – 101 – சுற்றுலாத் தலங்கள் – பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள்–II மாநிலத் திட்டம் – KV – சுற்றுலா மையங்களில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல் –16 – பெரும் பணிகள்"
> (து.தொ.கு. 5452 01 101 KV 1604)".

6) இத்தொகையினை பெற்று பேரூராட்சிகள் இயக்குநருக்கு வழங்க, சுற்றுலா இயக்குநருக்கு உரிய அதிகாரம் வழங்கப்படுகிறது. இப்பணிகளை திருநெல்வேலி மாவட்டம், பணகுடி தேர்வுநிலைப் பேரூராட்சி மூலமாக மேற்கொள்ளவும் அனுமதி வழங்கப்படுகிறது.

7) மேற்சொன்ன பணிகளுக்கான பணி முன்னேற்ற அறிக்கை மற்றும் பணி முடிக்கப்பட்டதற்கான பயனீட்டுச் சான்றிதழ்கள் ஆகியவற்றை தவறாது அரசுக்கு அனுப்பி வைக்குமாறு சுற்றுலா இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

8) இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண்.59960/கல்வி–II/2010, நாள்: 21–10–2010–இல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ரா. சிவகுமார்,
அரசுச் செயலாளர் (பொறுப்பு)

பெறுநர்
சுற்றுலா இயக்குநர், சென்னை–2.
மாவட்ட ஆட்சித் தலைவர், திருநெல்வேலி மாவட்டம்.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–9. (2 படிகள்) (சுற்றுலா இயக்குநர் வழியாக)
மாநிலக் கணக்குத் தலைவர், சென்னை–9/18.
இயக்குநர், பேரூராட்சிகள் துறை, சென்னை–5.
செயல் அலுவலர், பனங்குடி தேர்வுநிலைப் பேரூராட்சி,
பனங்குடி – 627 109. திருநெல்வேலி மாவட்டம்

<u>நகல்:</u>
செயலாளர், தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை, சென்னை–9.
முதுநிலை நேர்முக உதவியாளர், சுற்றுலா–பதிவுத் துறை அமைச்சர் அலுவலகம், சென்னை–9.
சுற்றுலா அலுவலர், திருநெல்வேலி மாவட்டம்.
நிதி (கல்வி–II/வ.செ.பொ–2)த் துறை, சென்னை –9.
செயலாளரின் தனிச்செயலர், சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை, சென்னை–9.
செயலாளரின் தனிச்செயலர்,
தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித்துறை, சென்னை–9.
சுற்றுலா மற்றும் பண்பாட்டு (சு.1/சு.2/பொது–2)த் துறை, சென்னை–9.
தொழில்நுட்ப இயக்குநர், தேசிய தகவல் மையம், சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.